மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள்

DR. H. V. HANDE : I am trying to give maximum co-operation. Again the Hon. Chief Minister is trying to bring in communities. We will try to avoid communities. Let us have an understanding. . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்த வேண்டுகோளைத்தான் எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் எடுத்துச் சொன்னேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்தத் தேர்தலின் போது நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். சேரன்மாதேவி சட்டப் பேரவை உறுப்பினர் அங்குள்ள சூழ்நிலையை எடுத்துச் சொன்ன நேரத்திலே நான் உடனே தொலைபேசி மூலமாக அங்குள்ள அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. அதுசம்பந்தமாக 3 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு பாரபட்சமற்ற முறையிலே எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தின்மீது விவாதம் தேவையில்லை. ஆகவே, இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

அடுத்தபடியாக திருமதி அனந்தநாயகி அவர்கள் தீர்மானம் (அவர்கள் இப்போதுதான் வந்துகொண்டிருக்கிறார்கள்—சிரிப்பு) அவர்கள் இடத்தில் இல்லாமல் இருந்தார்கள். இப்போது வந்து விட்டார்கள். அவருடைய தீர்மானமும் இதே அடிப்படையில் இருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்தத் தீர்மானத்தின்மீது விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தால் அதற்கும் அனுமதி மறுக்கிறேன்.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(அ) அலுவல் ஆய்வுக் குழுவுக்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு சட்டப் பேரவையின் 193(1)—வது விதியின்கீழ் பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:—

1. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் (பேரவைத் தலைவர்).
2. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதலமைச்சர்).
3. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (பேரவை முன்னவர்).
4. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்).
5. திரு. து. ப. அழகமுத்து (அரசு தலைமைக் கொறடா).
6. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.

1971 மார்ச் 26] [பேரவைத் தலைவர்]

7. திரு. கே. டி. கே. தங்கமணி.
8. திரு. ஏ. ஆர். பெருமாள்.
9. திரு. திருப்பூர் ஏ. எம் மொய்தீன்.
10. டாக்டர் எச். வி. ஹாண்டே.
11. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
12. திரு. ஈ. எஸ். தியாகராசன்.

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக் குழுவின் தலைவர் ஆவார்.

அலுவல் ஆய்வுக் குழுவின் முதல் கூட்டம் இன்று பகல் 11 மணிக்குப் பேரவைத் தலைவர் அறையில் நடைபெறும்.

(இ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதாவை அறிமுகம் செய்ய குடியரசுத் தலைவர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

4. அரசினர் மசோதா.

தமிழ்நடு 1971-ம் ஆண்டு நகர-நட்டுப்புற அமைப்பு மசோதா

மாண்புகுமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு,அனுமதி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இம்மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

5. அரசினர் தீர்மானங்கள்.

(அ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவையுரிமைக் குழுவிற்கு பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க கல்வி—வருவாய்த் துறை அமைச்சர் தீர்மானம் கொண்டு வருவார்கள்.